# மன்னர் அதிரடியில் பத்து படையினர் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார்–தள்ளாடி இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகளும், மகளிர் படைப் பிரிவினரும்நடாத்தியதுணிகரமான அதிரடித் தாக்குதலில் பத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பதினொரு நவீனரக துப்பக்கிகளும் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

நேற்றுக்காலை தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து 35-க்கும் அதிகமான இரா வத்தினர் வீதித்தடைகளை அகற்றிக்கொண்டு முகாமிலிருந்து 350 யார் தூரத்திலுள்ள வங்காலைச் சந்திக்கு இராணுவத்தினர் முன்னேறியபோது, புலிகளின் மகளிர் படைப்பிரிவினர் உள்ளடக்கிய அதிரடிக் குழுவொன்று இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொண்டதில் 10க்கும் அதிகமான இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் படுகாயங்களுடன் முகாமுக்குள் தப்பி ஓடினார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 07 இதழ் 68
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 19 — 04 — 1992

# தெரிவுக் குழு புலிகளுக்கு கடிதம்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக் குழு விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வமான கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கடிதத்தை கொழும்பிலிருந்து நேற்று புறப்பட்ட பலப்பிட்டிய சித்தார்த்த

[4-ம் பக்கம் பார்க்க]

## ★ இலங்கை அரசின்

# இரட்டை வேட அணுகுமுறை சமாதானக் கதவை மூடிவிடும்

## தலைவர் பிரபாகரன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"ஒருபுறம் யுத்தத்தை தீவிரப்படுத்திக்கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி, புலிகள்மீது நெருக்குதல்போட்டு ஒரு தீர்வைத் திணித்துவிடலாம் என சிங்களஅரசு எண்ணுகிறது. போரும் பேச்சும் என்ற இந்த இரட்டை வேட அணுகுமுறையை எமது விடுதலை இயக்கம் ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. தமிழீழமண்மீது பெரும் ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டு தமிழ் மக்கள் பெருந்தொகையில் கொன்று குவிக்கப்பட்டால் நாம் திறந்து வைத்திருக்கும் சமாதானக்கதவு மூடப்பட்டுவிடும் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன்."

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு நினைவு தின அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மனித வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத, எவருமே சாதித்திராத, மகத்தான மனித அர்ப்பணிப்புகளைக் கொண்டதாக எமது விடுதலைப்போராட்டம் புகழீட்டி நிற்கிறது. இந்த அற்புதமான தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஒரு உன்னதமான தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார்.

சத்தியத்திற்காக சாகத் துணிந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்கமுடியும். இதற்கு அன்னை பூபதியின் தியாகம் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு. சத்தியத்திற்காக தர்மத்திற்காக அவர் சாவை அரவணைத்துக் கொண்டார். இந்த ஒப்பற்ற ஈகையால் ஒரு சாதாரண தயான அவர் அசாதாரண சாதனையைப் புரிந்து

(2-ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கருத்தை அரசுக்கு தெரிவிப்போம்

(கொழும்பு)

புலிகளுடனானபேச்சுக்களின் விபரங்களை அரசுக்குத் தெரிவிப்போமென யாழ். விஜயத்தை மேற்கொள்ளும் பௌத்த குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

# பிரபாவை இந்தியா விரைவில்கோரும்

[சென்னை]

இரு விபியர்களை ஒப்படைக் குமாறு விபியாவிடம் அமெரிக்கா கோரியதுபோல் புலிகள் தலைவர் பிரபாகரனை ஒப்

[4-ம் பக்கம் பார்க்க]

# யாழ். நகரை வட்டமிட்ட இருகுண்டு வீச்சுவிமானங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு இருதடவைகள் இரு பொம்மர்கள் நகர்ப்பகுதியையும் அதையண்டிய பகுதிகளையும் சுற்றி வட்டமிட்டதை யடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இரவு7மணியளவில் லாலிப் பகுதியிலிருந்து வந்த இரு பொம்மர்கள் பத்து நிமிடங்

[4ம் பக்கம் பார்க்க]

# நாலு தமிழ் மீனவர் திருமலையில் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள செல்வாநகரில் படையினரால் ஐந்து தமிழ்மீனவர் கடத்தப்பட்டு அவர்களில் நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் மாத்திரம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் தப்பி வந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக் காலங்களில்

4ம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு எதிராக பேரணி எதிர்க்கட்சிகள் முஸ்தீபு

[கொழும்பு]

தற்போதைய அரசு பதவியிலிருந்து விலகி ஜனதிபதி தேர்தலையும் பொதுத்தேர்தலையும் உடனடியாக நடத்த வேண்டுமென்று கோரி எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து மாபெரும் மக்கள் எழுச்சி பேரணிகளை கொழும்பில் நடத்தவிருக்கிறார்கள்.

அத்துடன் வெகுவிரைவில் அரசுக்கு எதிராக மாபெரும்

(4ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ்ப்பாணம் நோக்கி நேற்று

# பௌத்த பிக்குகள் குழு புறப்பட்டது நாளை புலிகளை சந்திப்பார்களாம்!

[கொழும்பு]

விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்துவதற்கு பலப்பிட்டிய சித்தார்த்ததேரர்.மாதம்பகே அஸ்கிரி நாமதேரர் தலைமையிலான பத்துப் பேரடங்கிய பௌத்த பிக்குகள் குழு யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுக்காலை புறப் பட்டது. பெரும்பாலும் இக் குழு இன்று யாழ்ப்பாணம் சென்றடையுமென ஏ. எவ், பி. செய்தி நேற்றிரவு தெரிவித்தது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

இனப்பிரச்னை தீர்வு குறித்து புலிகளுடன் பேசும் நோக்கில் இவர்களது யாழ். விஜயம் அமையுமெனக் கூறப்படுகிறது. பௌத்த குழுவினர் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் நாளை பேச்சுவார்த்தைகளை நடாத்துவார்களென வும் உடனடியாக யுத்த நிறுத் தம், புலிகளின் பாதுகாப்பிலுள்ள பொலிசாரின் விடுதலை குறித்து பௌத்த குழுவினர் வலியுறுத்துவார்களெனவும்

(4-ம் பக்கம் பார்க்க)

# 'பிரபா'வுடன் சந்திப்பு: புலிகள் நிராகரிப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை சந்திப்பதற்கு பௌத்த பிக்குகள் விடுத்த கோரிக்கை புலிகளால்

(4ம் பக்கம் பார்க்க)

# மதுரையில் குண்டு வெடிப்பு

[சென்னை]

மதுரையில் தினமலர் செய்தி ஏடு அலுவலகம் முன்னால் நேற்று அதிகாலை ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் அந்த அலுவலகச் சுவர், யன்னல் கதவுகள் சேதமடைந்தன.

எவரும் காயமடையவில்லையென்றும் அந்த அலுவலகத்

[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### ஜோதிட விஞ்ஞானம்

27-04-92 செவ்வாய் மாற்றம், புத்தாண்டுப் பலன்கள், மௌனகுரு கடவுள் சுவாமிகள் அற்புத வரலாறுகள் அடங்கியவை. ரூபா 7/-. எங்கும் விற்பனையாகின்றன. சோபிதா, ரகுநாதன் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (நூலாசிரியர்: சத்தியதாஸன்). (சி-6174)

### வினு — விடை

உயர்தர விஞ்ஞான பாடங்களுக்கான கடந்தகால வினு—விடைகள் (Pass Papers), மாதிரி வினுத்தாள்கள் (Model Papers) விற்பனையில் உள்ளன. தொடர்பு: உயர்தர தராதரக் கல்வி நிலையம், ('A' Level Centre), 1-ம் ஒழுங்கை, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். [ஏ-2056]

### புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை ஆண்டு - 5 (1992) 19-04-92 ஞாயிறு மு.ப. 8-00, மு. ப. 11-00 நேரங்களிலும், ஆண்டு - 5 (1991) 23-04-92 வியாழன் மு.ப. 7-00, மு.ப. 11-00 நேரங்களிலும் நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-6180)

### கல்வி

G. C. E. (O L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினுல் 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. [சி-6179]


# அன்னைபூபதியின் 4ம் ஆண்டு இறுதிநாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு தின இறுதிநாள் அடையாள உண்ணுவிரதமும், நினைவுக் கூட்டமும் இன்று மூன்று இடங்களில் நடைபெறவுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு:

**தென்மராட்சி**

இடம்- கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் (தென்மராட்சிப் பிரிவு) காலம்- இன்று ஞாயிற்றுக் கிழமை, தேசியக் கொடியேற்றுதல- காலை 8-00 மணி, உண்ணு நோன்பு- காலை 8-00 மணி—மாலை 4-00, நினைவுக் கூட்டம்- இரவு 7-00.

நிகழ்ச்சி நிரல்- உருவப் படத்திற்கு மாலை சூடுதல், நினைவுச் சுடரேற்றுதல் தலைமையுரை- செல்வி இளநிலா (த. வி. பு. மகளிர் முன்னணி) நினைவுரை: திரு. தமிழன்பன் (ஜவான்), [போராளிகள் குடும்ப நலக்காப்பகப்பொதுப் பாளர் யாழ். மா.], திரு. பரா [ம. ஊ. கொ. மு. பொறுப்பாளர்] செல்வி ஜெயா [தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்], திரு. கந்தன் [அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர், தென்மராட்சி]. கலை நிகழ்ச்சிகள்.

**யாழ்ப்பாணம்**

இடம் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் [மட்டு - அம்பாறை தொடர்பகம்), காலம் இன்று ஞாயிற்றுக் கிழமை தேசியக்கொடியேற்றுதல - காலை 8 மணி, உண்ணு நோன்பு - காலை 8மணி 4மணி நினைவுக்கூட்டம் - இரவு 7 மணி.

நிகழ்ச்சி நிரல்:- உருவப் படத்திற்கு மாலை சூடுதல், நினைவுச் சுடரேற்றுதல், தலைமையுரை - திரு. அருணகிரி (மட்டு. அம்பாறை மாவட்ட தொடர்பக இணைப்பாளர்), நினைவுரை - திரு. இளம்பரிதி-அரசியல் நிர்வாக பொறுப்பாளர்-யாழ். மாவட்டம், திரு. புதுவை இரத்தினதுரை (கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் தமிழ் ஈழம்] செல்வி மாலினி [பாதிக்கப்பட்ட பெண்கள புனர்வாழ்வுப் பொறுப்பாளர்], திரு. யோகி [கல்விக் குழுப் பொறுப்பாளர், த. வி. பு.], கலை நிகழ்ச்சிகள்.

**வடமராட்சி**

இடம்: வல்வெட்டித்துறை அம்மன் கோவலடி (வடமராட்சிப் பிரிவு கடற்புலிகள்) காலம்: இன்று ஞாயிற்றுக் கிழமை தேசியக் கொடியேற்றுதல் காலை 8-00 மணி உண்ணு நோன்பு காலை 8-00 மணி மாலை 4-00 மணி நினைவுக் கூட்டம் இரவு 7-00 மணி.

நிகழ்ச்சி நிரல்: உருவப்படத்திற்கு மாலை சூடுதல், நினைவுச் சுடரேற்றுதல் தலைமையுரை, நினைவுரை திரு. நாவண்ணன் [ம. உ. கொ, மு. பிரிவு யாழ்.மாவட்டம்) திரு. தங்கன் (உதவி அரசியல் நிர். பொறுப் யாழ். மாவட்டம்) செல்வி ஆத்தி [த. வி, பு. மகளிர் முன்னணி யாழ் மாவட்டம்) திரு. வாஞ்சிநாதன் [உதவி ம உ கொ. மு. பொறுப தமிழீழம்] கலை நிகழ்ச்சிகள்.

# கண்தானம் வழங்கியதில் இலங்கை சாதனை

(கொழும்பு]

உலகில் கண்பார்வை யற்றோருக்கு கண்தானம் வழங்குவதில் இலங்கையில் உள்ள கண்தான வங்கி புதிய சாதனை படைத்துள்ளது.

உலகில் உள்ள 20 நாடுகளில் வாழும் 29,995 பேருக்கு கண்தானம் வழங்கியே இலங்கை கண்தான வங்கி இச்சாதனையை புரிந்துள்ளது, எதிர்வரும் 25-ம் திகதி கண் தானத்துடன் இத தொகை 30,000 ஆக அதிகரிக்கும் எனவும். இதனை ஒரு விழாவாக கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. (க)

# கணித, விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை]

கல்வித்திணைக்களம் வடமராட்சி கோட்ட பாடசாலைகளுக்கிடையே கணித விஞ்ஞானப்போட்டியை நடாத்தியது.

குழுநிலையில் ஆறுபிரிவுகளாக நடை பெற்ற இப் போட்டிகளில் 60 பாடசாலைகள் பங்குபறறின.

இப்போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகள் விபரத்தை வடமராட்சி பிரதிக் கல்விபணிப்பாளர் திரு. எஸ். செல்லததுரை அறிவித்துள்ளார்.

ஆண்டு 6 1-ம் இடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி (1:1 புள்ளிகள்) 2-ம் இடம் வட இந்துமகளிர்கல்லூரி 98 புள்ளிகள்,

ஆண்டு 7 1-ம் இடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி (88 புள்ளிகள்) 2-ம் இடம் வட இந்து மகளிர்கல்லூரி (70 புள்ளிகள்)

ஆண்டு 8 1-ம் இடம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி (11 புள்ளிகள்) 2-ம் இடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி (117 புள்ளிகள்)

ஆண்டு 9-ம் 1ம் இடம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி (166 புள்ளிகள் 2-இடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி [89 புள்ளிகள்)

ஆண்டு 10 1-ம் இடம் பருத்தித்துறை ஹாட்லிககல்லூரி 116 புள்ளிகள் 2.ம் இடம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி (153 புள்ளிகள்]

ஆண்டு 11 1ம் இடம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி (1c2 புள்ளிகள] 2-ம் இடம் வட இந்துமகளிர் கல்லூரி [167 புள்ளிகள்] (52)

## ராஜீவ் நினைவாக பரிவர்த்தனை நிலையம்

(சென்னை)

ராஜீவ் காந்தி நினைவு தினததை முன்னிட்டு அவர் கொலையுண்ட ஸ்ரீபெரும்புத்தூரில் மே மாதம் 21-ம் திகதி புதிய தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம் அமைக்கப் படவுள்ளது.

இப்பரிவர்த்தனை நிலையம் ராஜீவ் காந்தியின் நினைவுகளை மக்கள் மத்தியில் எடுத்தியம்பும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை அரசின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசியத்தாய் என்ற அந்தஸ்திற்கு உயர்ந்தார்.

அறப்போரிலும் சரி, ஆயுதப்போரிலும் சரி எமது விடுதலைப்போர் உலக சாதனைகளை படைத்துவருகிறது. மனித ஈகையின் சிகரததை எட்டியிருக்கிறது.

அகிம்சையின் அறத்தையும் ஆன்மீக தர்மத்தையும் போதித்துவந்த பாரத நாடு, ஆக்கிரமிப்பு பூதமாக, அன்றொருநாள், எம்மண்மீது கால் மிதிததது. அப்பொழுது எமது போராளி ஒருவன் பாரததின ஆன்மீகமரபில் அறப்போரைத் தொடுத்தான். காந்தி அடிகளின் சாத்விக தத்துவத்தை பாரத நாட்டிற்கு புகட்டிக்காட்ட விரும்பினுன். ஆன்மீக உறுதிப்பாட்டின அதியுர்ந்த அர்ப்பணிப்பாக அவனது உயிர்த்தியாகம் அமைந்தது. திலீபனின் தியாகம் காந்தியின அறக்கோட்பாட்டிற்கு ஒரு மகோன்னதமான செயறபாட்டு வடிவம் கொடுத்தது. பாரதத்தில் மடிந்துபோன ஆன்மீகம் தமிழீழத்தில் புதுபொலிவுடன் புரட்சிவடிவததில் மறுபிறப்பு எடுததது.

திலீபனின் தியாகம் இந்திய மாயைக் கலைத்தது. தமிழீழ் தேசிய உணர்வை தட்டி எழுப்பியது. இந்த தேசிய எழுச்சியின வெகுஜன வடிவமாக அன்னையின் அறப்போர் அமைந்தது.

அந்த வயோதிபத் தாய் நீதியின் நெருப்பில் தன்னை எரித்துக்கொண்டாள், அந்தத் தீ, என்றும் அணையாத சுதந்திர தீபமாக, எம்முள் இன்றும் எரிந்துகொண்டிருக்கிறது.

தேசியவிடுதலையை முன்னெடுக்கும் புரட்சிரகர இயக்கம் என்ற ரீதியில் புலிகள் இயக்கமானது காலத்திற்குக் காலம், வரலாற்றுத் தேவைகளுக்கு ஏற்ப, புதிய போராட்ட உத்திகளை அறிமுகம் செய்திருக்கிறது. அத்துடன் அந்தப் போராட்ட முறைக்கு முன்னுதாரணமாகவும் இலக்கணமாகவும் திகழ்ந்த அற்புதமான அர்ப்ப பணிப்புகளையும் செய்துள்ளது. இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்படும் உலகிற்கு ஒரு முன்மாதிரியாக, வழிகாட்டியாக திகழ்வதற்கும் இந்த தனித்துவமான பண்புகள்தான் காரணம்.

போர்முறையில் நாம் காட்டும் தீவிர அக்கறைபோன்றுதான் சமாதான வழிமுறையிலும் நாம் நேர்மையான அணுகுமுறையைக் கடைப்பிடித்தோம். பல தடவைகள் போர் நிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொண்டோம். இன்றும் சமாதானத்தின் கதவுகளை அகலத் திறந்துவிட்டிருக்கிறோம்.

எனினும் தமிழ் மக்களின் தேசியப் பிரச்னைக்குசமாதான வழியில் தீர்வு காண்பதற்கு சிங்களப் பேரினவாதிகள் தயாராக இல்லை. மனித தர்மத்தின் அடிப்படையில் தமிழருக்கு நீதியும் நியாயமும் வழங்க சிங்கள தேசம் தயாராக இல்லை. ஆயுதபலமூலம் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும்; தமிழினத்தை துப்பாக்கி முனையில் பணியவைக்கவேண்டும்; தமிழன் தாய்மண்ணை பலவந்தமாக பறித்தெடுக்கவேண்டும்; என்ற பழைய அடக்குமுறைப் பாதையை சிங்கள ஆளும் வர்க்கம் கைவிட்டதாகத் தெரியவில்லை.

தமிழரின் பிரச்னை குறித்து சிங்கள அரசியல் உலகில் எவ்வித அடிப்படையான மன மாற்றமும் நிகழ்ந்ததாக தெரியவில்லை. இரத்தமும், கண்ணீரும் தோய்ந்த ஒரு நீண்ட முடிவில்லாத சோக வரலாற்றைத் தழுவி நிற்கும் எமது மக்களின துயரநிலை பற்றி சிங்கள இனவாதிகள்கவலைகொண்டதாகத் தெரியவில்லை. முப்பதினுயிரம் அப்பாவித் தமிழரின் பிணக்குவியல்கள் மீது மேடையமைத்துச் சிங்களப் பேரினவாதம் மிகவும் அதர்மமான அநாகரிகமான அரசியலை நடத்தி வருகிறது.

நாம் மாதான மார்க்கத்திற்கு விரோதிகள் அல்லர். ஆனுல் சமாதான அணுகுமுறை என்பது எமது மக்களின் உரிமைகளையும், நலன்களையும் விட்டுக்கொடுக்கும் விவகாரம் அல்ல. எனினும் எமது மக்களின் உரிமையை வென்றெடுக்க முடியுமானுல் எமது மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்க முடியுமானுல் சமாதான வழிமுறையை நாம் தழுவிக்கொள்ளததயார். ஆனுல்எமது எதிரியோ சமாதான அணுகுமுறையை ஒரு அரசியல் பொறியாக கையாள விரும்புகிருன். எனவே எதிரியின தந்திரோபாயததில் நாம் மிகவும் விழிப்டாக இருக்கவேண்டும்.

இன்று நாம் மிகவும் நெருக்கடியான வரலாற்றுத் திருப்புமுனையை சந்தித்து நிற்கிறோம். எதிரி எம்மீது படைகொண்டு தாக்கலாம். புதிய ஆக்கிரமப்பு யுத்தத்தை தொடரலாம். எது நிகழ்ந்தாலும், எதற்கும் அஞ்சாத துணிவும் உறுதியும் எம்மிடமுள்ளவரை எந்த சக்தியாலும் எம்மை வென்றுவிடமுடியாது. ஒரு சத்திய யுத்தத்தில் தர்மமே வெற்றிகொள்ளும் என்பது வரலாற்று உண்மை.

இன்றைய இப்புனித நாளில் அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய, உயிர்நீத்த எமது தியாகிகளையும், மக்களையும் நினைவில்நிறுத்தி அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவோமாக.

# இன்று உயிர்த்த ஞாயிறு: மரணத்தைவெற்றிகொண்ட சத்தியசீலன் இறிஸ்து

**செல்வி**

**தா. மேர்லின் மைதிலி**

இன்று உயிர்த்த ஞாயிறு. உலகனைததுக் கிறிஸ்தவ மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடும் மங்களகரமான பெருவிழா. சத்தியன் யேசு, சாவை வெற்றிகொண்ட தினம் சத்தியத் திருச்சபையின் விழாக்களிலே எல்லாம் முதன்மையானதும், மகிழ்வூட்டுவது மான பெருவிழா. கடந்த 40 நாட்களாக இவ்விழாவிற்காக ஆயத்தம் செய்து, கண்டுகளிக்க இருந்த தனிப் பெரும் விழா நாமும் ஒரு நாள் உயிர்ப்போம் என்ற சத்தியத்தை விசுவாசத்தில் உறுதிப்படுத்தும் உன்னதமான விழா.

''இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள்; 3 நாளில் அதைக் கட்டிவிடுவேன்'' என்று கூறியதை அனைவரும் அறிய நிருபித்துக் காட்டிய நினைவு நாள்.

புதிய உலகைப் படைக்க, போதனைகள் புரிந்த யேசு, சாதனைகளும் பல புரிந்தார். புதுமைகள் மூலம் தம்மை இறைகுமாரன் என எண்பித்தவரைப் புரட்சி வீரன் எனக் குற்றம் சாட்டி, மரண தண்டனை விதித்து, அவரை அடக்கம் செய்ததோடு, அவரை அடக்கிவிட்டதாக இருள் கொக்கரித்தது

எந்தக் கல்லறையோடு அவர் வாழ்வு முடிந்து, மடிந்து விட்டதென எக்காளமிட்டார்களோ, அதே கல்லறையில் இருந்து புதிய சரித்திரம், புது சகாப்தம், புது வாழ்வு புறப்பட்டது. காரிருள் நீங்கியது. கல்லறை திறந்தது. புது ஒளி புறப்பட்டது. கர்த்தர் யேசு மரணத்தை வென்று வெற்றி வீரனுகப் புறப்பட்டார்.

எந்தச் சிலுவையை அவமானச் சின்னம் எனக் கருதி, அவரை அறைந்து கொன்முர்களோ, அதே சிலுவையைத் தமது மாபெரும் வெற்றியின் சின்னமாகக் கொண்டு, கல்லறையை விட்டு வெளிவந்தார.

''கிறீஸ்து உயிர்த்திராவிட்டால், நமது வேதமே பொய்த திருக்கும்'' என்ற புனித சின்னப்பரின் வாக்கு, இந்நாள் நமக்கு எத்தகைய மாண்பு மிக்க நாள் என்பதைப் பறைசாற்றுகிறது.

## பரீட்சை முடிவுகள் மறுபரிசீலனை

[கொழும்பு]

கடந்த வருடம் டிசம்பர் மாததில் நடைபெற்று அண்மையில் வெளிவந்த க. பொ. த. (சாதாரண)பரீட்சைமுடிவுகள் குறித்து மீள்பரிசீலனை செய்ய விரும்புவோர் மே மாதம் 10-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் பரீட்சைத் திணைக்களத்திற்கே அனுப்பப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லினக் கோழி வளர்ப்பு ஊக்குவிப்பு

[யாழ்ப்பாணம்]

நல்லினக்கோழி வளர்ப்பினை ஊக்குவிக்குமுகமாக, அடைவைப்பதற்கேற்ற, நல்லினக் கோழி முட்டைகள் தற்பொழுது தமிழீழ ஆய்வு நிறுவனத்தினுல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஆர். ஐ. ஆர்.,ருேவைற் நல்லினக் கோழி முட்டைகளை சுன்னுகத்திலுள்ள காமதேனு விவசாய கால்நடைப்பண்ணையிலும் மற்றும் தாயகம் பல்பொருள் அங்காடிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# கொள்கையில் உறுதியாயிருந்த அன்னைபூபதியின் ஆத்மபலத்தினால் இந்திய இராணுவம் தோற்றுப்போனது

— பொன். பூலோகசிங்கம்

(யாழ்ப்பாணம்)

''தியாகிஅன்னை பூபதிதான் கொண்டிருந்த கொள்கையில் உறுதியாயிருந்ததாலும் அகற்கரிய ஆத்மபலத்தை கொண்டிருந்ததாலும் அவரிடம் இந்திய இராணுவம் தோற்றுப்போனது''

இவ்வாறு அன்னை பூபதி நான்காவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் யாழ். மாவட்ட சன சமூக சமாசங்களின் ஆதரவில நல்லூர் வடக்கு வீதியில் நடைபெற்ற போது சட்டத்தரணியும் உலகத்தமிழர் பண்பாட்டுக் கழக தலைவருமான பொன். பூலோகசிங்கம் உரையாற்றினர்.

அவர் மேலும் பேசுகையில் எம் மண்ணை இந்தியப்படையினர் ஆக்கிரமித்து தமிழ் மக்களை சிறைப்பிடித்துசித்திரவதை செய்து கொன்றொழித்து கொடுமைகளை செய்தும் தமிழ் மக்களின் குரல்வளையை நசுக்கியும் ஒடுக்கிக் கொண்டிருந்த நேரத்திலே போர்க்கோலம் கொண்டு அன்னைபூபதி உலகிற்கு காட்டுமுகமாக தன்னை முழுமையாக அர்ப்பணித்து உண்ணா நோன்பு அனுஷ்டித்து வீர சுவர்க்கமடைந்தார்.

அன்னைபூபதி இருகோரிக்கைகளை முன் வைத்து உண்ணா நோன்பினைமேற்கொண்டார். அன்னைபூபதியின் உண்ணாவிரதத்தை இந்திய இராணுவத்தினர் பல தடவை முறியடிக்க முயற்சி செய்தும் தோற்றுப் போயினர். இவருடன் மற்றும் இரு பெண்மணிகள் ஆரம்பித்த உண்ணாவிரதத்தை முறியடித்தார்கள். ஆனால் சத்தியக் கடதாசி எழுதி வைத்து விட்டு அன்னைபூபதி தமிழ் மக்களுக்காக தன்னைத் தியாகம் செய்தார்.

அன்னைபூபதியின் உண்ணாவிரதப்போராட்டத்தை முறியடிக்க முடியாது இந்திய மத்திய அரசு தோற்றுப் போனது. இதனால் போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை, மாறாக வளர்ச்சியடைந்தது. இந்திய இராணுவம் தங்கள் இராணுவ நடவடிக்கைகளை நியாயமெனக் கூறிக் கொண்டு தமிழ் மக்களை அழிக்க முயற்சி செய்தது

இந்திய மத்திய அரசு அன்னை பூபதி மரணத்திற்குப் பினனர் இதனையே சிந்தித்து தமிழ் மக்களை அழிக்க திட்டம் போட்டனர். உலக வரலாற்றில் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுக்குள் புகுந்து அந்நிய இராணுவத்தினர் மக்களை கொன்று ஒழிப்பதை காணலாம். அதே போல்தான் இந்தியப்படைகளும் எம் தமிழீழத் தேசத்தில் புகுந்து மக்களை தமிழ் பிரதேசங்களில் கொன்றொழித்தனர்.

இந்திய இராணுவத்தினரால் விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க முடியாது. விடுதலை இயக்கங்களுடன் மக்கள் இணைந்திருப்பதனால் அவர்களே கவசமாக உளளனர். விடுதலைப் போராட்டத்தை முறியடித்ததாக வரலாறேஇல்லை. மக்களால் விடுதலைப்போராட்டம் நடாத்தப் படுகிறது.

எம்தேச விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ் மக்கள் புலிகளோடு நிற்கின்றனர். கவசமாக உள்ளனர். இதனால்ஸ்ரீ லங்காப்படைகளாலும், இந்திய இராணுவத்தினராலுமஎதுவும் செய்யமுடியவில்லை. இந்திய இராணுவம் அன்னைபூபதியிடம் தோற்றுப் போனது. அன்னை பூபதியின் ஆத்மபலமே அதற்குக்காரணமாகும்.

விடுதலைப்புலிகள் என்றைக்கும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராகவே யுள்ளனர். ஸ்ரீலங்கா அரசிற்கு உலக நாடுகள் பல அழுத்தகளை கொடுத்தபடியினால் தான் பிரேததாஸா தெரிவுக் குழுவை நியமித்தார். உலக நாடுகள் பிரச்னையைத்தீர்க்குமாறு நெருக்குதல்களை இன்றும் கொடுத்துககொண்டு வருகின்றன.

விடுதலைப் போராட்டத்தில் 30,000 தமிழ் மக்களும் 4000க்கு மேறபட்ட போராளிகளும் உயிரிழந்துள்ளனர்இவர்களா தியாகம் வீண் போகாது. இந்திய இராணுவத்தை தமிழீழப்பிரதேசத்திலிருந்து வெளியேற்றிய வி. புலிகள் தமிழீழ இறமையையும் மட்டுமல்ல ஸ்ரீலங்கா நாட்டின் இறமையையும் காப்பாற்றினர்கள். இன்றுதலைவர் பிரபாகரன் தலமையில் வி. புலிகள இயக்கம் ஸ்ரீலங்கா சிங்கள இராணுவத்தை எதிர்த்து போராடிவருகிறார்கள.

கடந்த பல நூற்றாண்டுகளில் அந்நியப்படைகள் எம் பிரதேசத்தில வந்து ஆக்கிரமித்தபோது போத்துக்கேயரை எதிர்த்து சங்கிலி மன்னன் போராடியும், ஒல்லாந்தரை எதிர்த்து கைலாய வன்னியனும், ஆங்கிலேயரை எதிர்த்து பண்டாரவன்னியனும் எதிர்த்து போராடி அடக்கினர்கள். அதுபோலவே

[4-ம் பக்கம் பார்க்க]

## சரித்திர நாயகி

பாரதத்தின் படை வந்திங்கே
பார் அமைதி காப்பமென் றெம்மை
சீரழித்த சிறுமை கண்டே – அன்னை
சினந்திங்கே அறப்போர் தொடுத்தாள்
நீரொறுத்தாள்; உணவொறுத்தாள்
நீதி கேட்டே உயிர்துறந்தாள்
போரிட்ட தாயவள் தமிழ் வளர்த்தாள்
புதியதொரு சரித்திரம் படைத்துவிட்டாள்.

— 'நீர்வை இரதி'

# "தியாகிகளின் கனவுகளை பூர்த்திசெய்ய போராளிகளுடன் இணைந்து நிற்போம்"

## தேவர் உரை

(உடுவில்)

''சமாதானம் ஒற்றுமை என்பது ஒருவழிப்பாதை அல்ல. இருபகுதியினரும் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ள வேண்டியது அது. தமிழர் சரித்திரத்தில் ஒப்பந்தங்களும் பேச்சுவார்த்தைகளும் சமாதானத்தை, ஒற்றுமையை ஏற்படுத்த மாட்டா என்ற அனுபவபூர்வ உண்மையை உணர்ந்த பின்னரே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் எடுத்தனர். ஆயுதங்களால்தான் எமது தாயக மண்ணை-இழந்த பூமியை நாம் வென்றெடுக்க முடியும்''

சுன்னாகத்தில் நடைபெற்ற தியாகி அன்னை பூபதி ஞாபகார்த்தக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா இவ்வாறு கூறினர்.

உடுவில் வட்டவைப் பொறுப்பாளர் செல்வி நிலா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தேவர் அண்ணா மேலும் கூறியதாவது:

யுத்தம் உடன் நிறுத்தப்பட வேண்டும்; இந்திய அரசு விடுதலைப்புலிகளுடன் உடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தே அன்னைபூபதி உண்ணாவிரதம் ஆரம்பித்தார். ஆனால் அகிம்சைக்கு வித்திட்ட இந்திய அரசோ, உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் போன்ற அகிம்சை வழி போராட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

அன்னை பூபதி உயிரோடு இருந்திருந்தாலும்கூட அதே கோரிக்கைகளை முன்வைத்து இன்றும் உண்ணாவிரதம் ஆரம்பித்திருப்பார். அன்று இந்திய அரசு செய்த கொடுமைகளை இன்று இலங்கை அரசு செய்கின்றது. இலங்கை அரசிடம் ''யுத்த நிறுத்தத்தை அமுல் செய்; புலிகளுடன் பேசு'' எனக் கேட்டிருப்பார்.

இலங்கை அரசு புலிகளை பார்த்து தீவிரவாதிகள், இனவாதிகள், கொலைகாரர் என பிரசாரம் செய்கின்றது. உண்மையில் இனவாதத்துக்கு வித்திட்டவர்கள் யார்? பயங்கர கொலைகளை நடத்துபவர் யார்?

1956ல் தனிச்சிங்கள சட்டம், 1957ல் சிங்கள ஸ்ரீ சட்டம், 1958ல் கண்டியாத்திரை நடத்தியதன் மூலம் பெண்கள் மானபங்கம்! குருக்கள் உயிரோடு எரிப்பு போன்றவை; 1974ல் தமிழாராய்ச்சி மகாநாட்டில் குழப்பம் விளைவித்து ஒன்பது உயிர்களை பலிவாங்கியது. 1977 முதல் இன்றுவரை நடைபெறும் கலவரங்கள்; குண்டுவீச்சுகள், கொலைகள், பாலியல் வன்முறைகள், தீவைப்புக்கள் போன்ற பயங்கர குற்றங்களை யார் செய்கின்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். குண்டுமாரி பொழிந்து மக்களை கொன்றொழிப்பதும் உடமைகளை அழிப்பதும் பயங்கரவாதம் இல்லையா? இனவாதம் இல்லையா?

அவர்களின் இவ்வினவாத நிலைகளை எதிர்த்து 1977ல் தமிழர் கூட்டணி மகாநாட்டில் தனிநாட்டுக் கோரிக்கை முன்வைககப்பட்டது.

'தமிழ் தலைவர்கள் மேற்கொண்ட 'சத்தியாக் கிரகங்கள், உண்ணாவிரதங்கள் இனவெறியர்களால் குலைக்கப்பட்டன. சமாதான ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் பல முறை ஏற்படுத்தப்பட்டுகிழிக்கப்பட்டன. சாத்வீக போராட்டம் மூலம் தமிழர் உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்ற நிலையிலேயே தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள இயக்கம் ஆரம்பமானது.

1983ல் திருநெல்வேலி தாக்குதலுடன் போராட்டம் மும்முரமாகியது. எமது ஆரம்ப காலத்தில் இந்திய அரசு எமக்கு ஆயுதபயிற்சிகளைக் கூட வழங்கியது. ஆனால் நாம் அவர்களில் முழு நம்பிக்கை கொள்ளாமல் எம்மீது நாமே நம்பிக்கை – தன்னம்பிக்கை-வைத்து பயிற்சிபெற்றோம்; போராடினோம்.

தனதுஎண்ணத்துக்கு இனங்காத காரணத்தால் புலிகளை ஒழிக்க சமாதான படை என்ற நிலையில் இந்திய ராணுவம் இங்கு வந்தது. விடுதலைப் புலிகளை ஒழிப்பதாக கூறி அப்பாவி தமிழ்மக்களை அழித்தது. பெண்களை மானபங்கப் படுத்தியது. சொத்துக்களை சூறையாடியது.

இதனை எதிர்த்துத்தான் அன்னை பூபதி உண்ணாவிரதம் இருந்தாா.

இந்திய அமைதிப்படை இங்கு இருந்த காலத்தில் மக்களிடம் நிம்மதிஇல்லை. இன்று நடுநிசியிலும் அச்சமின்றி ஒரு பெண் தனியாக எங்கும் போய்வரக்கூடிய நிலையை நாம் இங்கு ஏற்படுத்தி உள்ளோம்.

அன்னைபூபதி, மாவீரர்களின் கனவை பூர்த்தி செய்ய போராளிகளுடன் துணைநின்று தமிழீழத்தை நாம் வென்றெடுக்க வேண்டும்.

(109)

## உதைபந்தாட்டப போட்டி

[யாழ்பபாணம்]

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்.

சிவானந்தா அணியை எதிர்த்து நியூ சுப்பர் அணி — மோகனதாஸ் அணி போட்டியில் வென்ற அணி மோதும். இபபோட்டிநெல்லியடி ம.மா.வி.யில் நடைபெறும்.

# யுத்த நிறுத்தத்திற்கு யாழ். ஆயர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''வடக்கு-கிழக்குப் பகுதியில் கண்காணிப்புடன் கூடிய யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டு, இனப் பிரச்னைத் தீர்வுக்காண பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும்.''

இவ்வாறு யாழ். ஆயர் பணியகத்தில் இருந்து ஒய்வுபெறவுள்ள வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

## இராசிபலன்

19/04/1992
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு சித்திரை 07)

துதியை மு. ப. 9-42 வரை; விசாகம் பி. ப. 4-25 வரை மரணயோகம் இராகுகாலம் மாலை 4 – 32 முதல் 6 – 02 வரை சுபநேரம் காலை 9 – 02 முதல் 10 – 32 வரை

மேஷம்: நல்வாக்கு, வித்யாலாயம், பொது ஜன பாராட்டு.

இடபம்: காரியம் கைகூடல், புத்தித்திறமை, மகிழ்ச்சி.

மிதுனம்: அதிகாரிகள் பயம் மனவெறுப்பு, குழப்பம்.

கடகம்; கருத்துமுரண்பாடு, ஐயப்பாடு, அலைச்சல்.

சிங்கம்: காரியஜயம். புத்திரர் லாபம், பாராட்டு.

கன்னி: அதிகஆசை, தப்பபிப்பிராயம், குரோதம்.

துலாம்: அதிகபிரயாசம், சுபகாரிய செலவு, தனவரவு.

விருச்சிகம்: பகைவர் தொல்லை, மரியாதைக்குறைவு குடும்ப பிரிவு.

தனுசு; புதியசிந்தனை, வாக்குவன்மை, பயணம்.

மகரம்: பயனற்ற வாதம், அகங்காரம், செலவு.

கும்பம்: வைத்திய செலவு, மனவேற்றுமை, இடையூறு.

மீனம்: தாழ்வு மனப்பான்மை, சஞ்சலம் குடும்ப அமைதியின்மை:

— ஜோஸ்யர்

# குண்டு பொருத்திய நிலையில் கொழும்பில் பல வாகனங்கள்

## படையினர் எச்சரிக்கை

(கொழும்பு)

குண்டுகள் பொருத்தப்பட்ட நிலையில், ஹில்மன், பென்ஸ் மற்றும் டொயட்டா வாகனங்கள கொழும்பு நகரில் நடமாடுவதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், இது குறித்துப் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் பொலிஸார் பொது மக்களை எச்சரித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்துப் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்; 3 ஸ்ரீ தொடர் இலக்கம் கொண்ட 3 ஹில்மன் கார்களும் மற்றும் வெள்ளை நிற டொயாட்டா டஸ்கள் குண்டுகள் பொருத்தப்பட்ட நிலையில் வீதிகளில் திரிவதாகவும் இவை எந்த நேரத்திலும் வெடித்துச் சிதறலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட வாகனங்களில் பெற்றோல் டாங்கிகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, குண்டுகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும், மட்டக்களப்புப் பகுதியிலேயே குண்டு பொருத்தும் வேலை நடைபெற்றதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (க)

# அன்னை பூபதி நினைவு பொதுஅறிவு போட்டி முடிவுகள் வெளியாகின

[யாழ்ப்பாணம்]

அன்னை பூபதி நினைவாக விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் நடாத்திய பொது அறிவுத் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் யாழ் மாவட்டத்தில் 2,812 மாணவர்கள் [ 'அ' பிரிவில் 186, 'ஆ' பிரிவில் – 497, 'இ' பிரிவில் 2,129 மாணவர்கள்] சித்தியடைந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 274 மாணவர்கள் ;'அ' பிரிவில் - 42, 'ஆ' பிரிவில் – 38, 'இ' பிரிவில் 194 மாணவர்கள்] சித்தியடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 371 மாணவர் [ அ' பிரிவில் 14, 'ஆ' பிரிவில் 34, 'இ பிரிவில் -323 மாணவர்கள்] சித்தியடைந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 181 மாணவர்கள் ('அ' பிரிவில் – 34, 'ஆ' பிரிவில் 66, 'இ' பிரிவில் 81 மாணவாகள்) சித்தியடைந்துள்ளனர்.

இத்தேர்வில் உயர் 'அ' பிரிவில் சித்தியடைந்த யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த – 31 மாணவர்களும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த – 8 மாணவர்க்கும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 11 மாணவர்க்கும், வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 19 மாணவர்க்கும் இன்று நிகழும் அன்னை பூபதி நினைவு நிகழ்ச்சியின்போது பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

உயர் 'அ' பிரிவில் சித்தியடைந்த மாணவர்களின் விபரம் நாளைய 'ஈழநாடு' வில் வெளிவரும். (சி)

# கியூபா டாக்டர் ரத்த தானம் செய்தார்

(கொழும்பு)

அம்பாறை மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட தமிழ் கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு கியூபா நாட்டு டாக்டர் ஒருவர் இரத்ததானம் செய்துள்ளார்.

குறிப்பிட்ட கர்ப்பிணிப் பெண்ணுக்கு இரத்ததானம் செய்ய எவரும் முன்வராததையடுத்து அம்மருத்துவமனையில் பணிபுரிந்த கியூபா டாக்டர் கர்ப்பிணிப்பெண்ணிற்கு இரத்ததானம் செய்தார். [க]

## மதுரையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்குப் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

பிரிவினைவாத அமைப்பு ஒன்றின் அச்சுறுத்தல் கடிதம் அப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். (கே)

# ★ பௌத்த குழு வருகைக்கு அரசு, எதிர்க்கட்சிகள் ஆதரவு தமிழ் குழுக்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

பௌத்த குழுவினர் புலிகளை சந்திக்க யாழ்ப்பாணம் செல்வதையும் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கும் அரசும் முக்கிய எதிர்க்கட்சிகளும் பூரண ஆதரவு தெரிவித்துள்ளபோது தமிழ்க்குழுக்களும் தமிழ்கட்சிகளும் பலத்த எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

மேலும் புத்தபிக்குகளின் மற்றொரு சாராரும் சிங்கள புத்த மதத்தலைவர் சிலரும் அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ் குழுக்களும் இதனை வன்மையாக எதிர்த்துள்ளன,

ஜனாதிபதியின் நல்லாசி பௌத்தகுழுவிற்கு உள்ளதால் இவ்விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமென பி. பி. ஸி.தெரிவித்தது. [சி]

# யாழ். விஜயம்பற்றி பௌத்த குழு பேட்டி

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பௌத்த பிக்குகள் தீவிரவாதிகள், இனவெறியர்கள், சிறுபான்மை இனமான தமிழ் மக்கள்மீது ஆதிக்கம் செலுத்த விரும்புபவர்கள் என்று நிலவிவரும் தவறான கருத்தை அழிப்பதும், அகற்றுவதுமே தங்களின் விஜயத்தின் முக்கிய நோக்கமென யாழ் செல்லும் மாதம்பே அஸாமி தேரர் பி. பி.ஸி. க்கு கூறியுள்ளார்.

மதகுருமார்கள் யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டும். யாழ்ப்பாண மக்களுடன் கலந்து பேசவேண்டும். என்று புலிப்படையினர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே தாம் இந்த விஜயத்தை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் கூறினார்.

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே சமாதானம், பரஸ்பர நம்பிக்கை நட்புறவு ஆகியவற்றை கட்டியெழுப்பும் மகத்தானபணிக்கு அத்திபாரத்தை நாட்டவும் இவ்விஜயம் உதவும் எனவும் அவர் கூறினார். (கே)

# இந்தியாவில் உளவு, பார்த்த பாகிஸ்தான் அதிகாரி கைது

(புதுடில்லி)

இந்தியாவில் உளவுவேலையில் ஈடுபட்ட பாகிஸ்தானிய தூதரக அதிகாரி ஒருவர் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டார்.

அந்த தூதரக அதிகாரி அஸ்ரப் அலி என்பவர் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் இரகசியமாக சில அரசு ஆவணங்களை பணம் கொடுத்துப் பெற்றுக்கொண்டபோது புலனாய்வுப் பிரிவினர் அவரைப் பிடித்தனர் ஒதுக்குப்புறமான ஓர் இடத்திலிருந்து இந்திய பிரஜை ஒருவரிடமிருந்து அவர் ஆவணங்களை பெற்றுக்கொண்டிருந்தனர்.

அவர்பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

திரு. அஸ்ரப் அலி உளவு வேலையில் ஈடுபட்டு வந்ததாக புலனாய்வுப் பிரிவினருக்கு ஏற்கனவே தகவல் கிடைத்ததைத்தொடர்ந்து அவரது நடவடிக்கைகள கண்காணிக்கப்பட்டுவந்தன. இவருக்கு அரசு ஆவணங்களைக் கொடுத்த இந்திய நாட்டவர் கைது செய்யப்பட்டு விசாரித்து வரப்படுகிறார். [கே]

## மன்னார்

[1-ம பக்கத் தொடர்ச்சி)

இதன்பின்பு தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து மூன்று கனரக கவசவாகனங்களுடன் மற்றுமொரு அணி முன்னேறி வந்தபோது வங்காலை இராணுவ முகாமிலிருந்தும் பிறிதொரு இராணுவ அணி இரு ஹெலிகளின் உதவியுடன் முன்னேறி வந்தன.

மேற்படி இரு அணிகளையும் விடுதலைப்புலிகள் இடைமறித்து நடாத்திய 15 நிமிடத் தாக்குதலில் இராணுவ அணிகள் பலத்த இழப்புகளுடன் முகாமுக்குள் பின்வாங்கிச் சென்றனர்.

## வீரச்சாவு

இத்தாக்குதலின்போது விடுதலைப்புலிகளின் தரப்பில் கப். காசிம் அல்லது தர்மா (சவரியூட் ரட்ணபாலா–பனங்கட்டிக்கொட்டு - மன்னார்), லெப். நரேன்)விக்டர் டலீமா–சிறுக்குளம் மன்னார்) ஆகிய இரு வேங்கைகள் வீரச்சாவை தழுவிக்கொண்டார்கள்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குலின்போது புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

மினிமினி இலகு இயந்திரத் துப்பாக்கி 1, எப். என். ஸி. ரகத்துப்பாக்கி 5, ரி 56, ரகத்துப்பாக்கிகள் 3, ரி 81, ரகத்துப்பாக்கிகள் 2, மினி மினி இலகு இயந்திரத்துப்பாக்கி ரவைக்கூடுகள் 300, ஏ கே. துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் 13, ரி 81 ரகத் துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் 6, எப். என். ஸி. துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் 16, ஏ. கே. ரவைகள் 900, 5. 5–6 ரவைகள 1200, ஜே. ஆர். கைக்குண்டுகள் 17. (வி)

## தெரிவுக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேரர் தலைமையிலான குழுவினர் நாளை விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. (மா)

## யாழ். நகரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குமேல் மூன்றுமுறை நகர்ப்பகுதியை சுற்றி வட்டமிட்டன.

பின் வேறுசில பகுதிகளிலும் வட்டமிட்டபின் பலாலிப் பகுதி நோக்கிச்சென்றன. பின் மீண்டும் 7-30 மணியளவில் வந்த இரு பொம்மர்களும் மூன்று தடவை சுற்றி வட்டமிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. [சி]

## புலிகளின் கருத்தை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தற்போதைய போருக்கான தீர்வை இத்தூதுக்குழு எடுத்துச் செல்லவில்லை ஆனால் போரை நிறுத்த புலிப்படையினர் விரும்புவது என்ன என்பதை அறியவுள்ளதாகவும்—

தற்போது புலிகளின் பாதுகாப்பிலுள்ள 40 சிங்களப் பொலிஸ்காரரை தாம் பார்வையிட விரும்புவதாகவும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த பௌத்தகுருமாரின் யாழ்,விஜயத்தின்போது பாதுகாப்புக்கான உத்தரவாதம் புலிகளால் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து அனுராதபுரத்திற்கு தரை மார்க்கமாக வரும் இக்குழுவினர் புனித அரச மரத்தடியில் மதச் சடங்குகளில் ஈடுபட்ட பின்னர் அரசின் ஹெலிக்கொப்டர் மூலம் பலாலி விமான நிலையம் வந்தடைவார்கள்.

அங்கிருந்து அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளினால் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவர். (கே]

## பிரபாவுடன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிராகரிக்கப்பட்டதாக ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

புலிகள் தலைவரை சந்திக்க ஏற்பாடுகள் செய்துதருமாறு பௌத்த குழுவினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை கோரியிருந்ததும் தெரிந்ததே. (சி-மா)

## யாழ்ப்பாணம் நோக்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏ. எப். பி. தெரிவித்தது.

நேற்றுக்காலை யாழ். நோக்கிப் புறப்பட முன்னா இக்குழுவினா சில கட்சிகளின் தலைவர்களை சந்தித்ததாகவும், அரசின் எந்தவித தீர்வுத்திட்டங்களையும் இவர்கள் யாழ்ப்பாணம் கொண்டு செல்லவில்லையென்றும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் இவர்கள் ஐந்து நாட்கள்தங்கியிருப்பார்கள்.

## கொள்கையில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்நிய இந்திய இராணுவமும் வி. புலிகள் இயக்கத்தை அழிக்க முயற்சி செய்து தோல்வி கண்டவர்களாவர். வி. புலிகளை எவராலும் அழிக்கவோ ஒழிக்கவோ முடியாது என்றார். (56]

## நாலு தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினரால் இப்பகுதியில் பல தமிழர் கடத்தப்பட்டு காணமல் போனதும் குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு எதிராக

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வேலைநிறுத்தத்தை நடத்துவதற்கான முயற்சிகளிலும் ஒன்றிணைந்து எதிர்க்கட்சிகள் ஈடுபடவிருக்கிறார்கள்.

அண்மையில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைந்த கூட்டத்தில் இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

அடுத்த மாத முதல் வாரத்தில் கிராம மட்டத்தில் மக்களிடையே அரசுக்கு எதிரான பிரசாரங்களை வலுப்படுத்தும் முகமாக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கிராம யாத்திரைகளையும் நடத்துவதற்கு உத்தேசித்திருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. [மா]

## பிரபாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைக்குமாறு இந்தியா இலங்கையிடம் கோருமென இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர் கேள்விக்கு திரு. நரசிம்மராவ் மேலும பதிலளிக்கையில்: இந்தியாவில் புலிகளைத் தடை செய்வதுபற்றி ஆக்கபூர்வமான முடிவொன்று விரைவில் எடுக்கப்படுமென்றார்.

அமெரிக்க விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தது தொடர்பாக இரு லிபியர்களை ஒப்படைக்குமாறு அமெரிக்கா கோரியது போல் பிரபாகரனை ஒப்படைக்குமாறு இந்தியா இலங்கையிடம் கோருமா என கேட்கப்பட்டபோது இந்தநடவடிக்கை பின்னர் மேற்கொள்ளப்படும் என்றும் பிரதமர் கூறினார். [சி]

# சாரணர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல சாரணர்கள், திரிசாரணர்கள் ஆகியோரை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் சீருடையுடன் கூடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. திரிசாரணர்கள் பாடசாலைச் சாரணர்கள் மற்றும் சாரணர் தலைவர்கள் இச்சேவைக்கான அழைப்பை ஏற்றுவரும்படி கேட்கப்படுகின்றார்கள்.


# மரண அறிவித்தல்

## க. ஆ. செல்லைய பிள்ளை

முன்னைநாள் யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகரும், அரசாங்க ஒப்பந்தகாரருமாகிய காரைநகர் பலுகாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 93, மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட க. ஆ. செல்லையாபிள்ளை காலமாகிவிட்டார். அன்னார் தங்கமுத்துவின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், மகேஸ்வரி, கிருஷ்ணவேணி, சண்முகராசா, நடேசன், வரதராசா, சச்சிதானந்தம், மகேந்திரன் (வர்த்தகர்கள்: யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற ஆ. க. கனகசபாபதி (வர்த்தகர், யாழ்ப்பாணம்), கு. சிவப்பிரகாசம் (வர்த்தகர், யாழ்ப்பாணம்), க. சிவபாதம் (வர்த்தகர், சுன்னாகம்), நாகராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி, மேனகா, இந்திராணி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் 19–4–92 (இன்று) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்;
பிள்ளைகள்.

[சி-6181]


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81